உ

கடவுள் துணை.

மார்க்கண்டேயர்

எமனைக்கண்டு புலம்பலும் பூசையும்,

மருத்துவதியம்மன் புலம்பலும்

அடங்கியிருக்கின்றன.

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

76

கடவுள் துணை.

மார்க்கண்டேயர் எமனைக்கண்டு புலம்பலும் - பூசையும்.

விநாயகர் துதி - விருத்தம்.

சீரான திருக்கடையூ ரமுர்தலிங்க நாதரது செயலைவாழ்த்தி, பேறான செந்தமிழால் மார்க்கண்ட நாடகத்தின் பெருமைகூற, தீராதவினையெவையும் தீர்க்கும் பிராமிமுதற் செல்வனை, காரானை மாமுகத்தோன் கருணைமிகு கமலபதம் காப்புத்தானே.

மார்க்கண்டேயர்சொல்-விருத்தம்.

கையில்மான்மழுவுமேந்துங் கடவுளே கடையூர் வாழும், தையலையிடத்தில்வைத்த தற்பரா என்னசெய்வேன், துய்யமாங்கதையுஞ் சூலபாசங்கொண்டென்னைக்கண்டு, மைநாகபர்வதம்போல் மறலியும் வாரானேயோ.

மார்க்கண்டேயர் தாயார்-புலம்பல்.

அப்பா மார்க்கண்டா என் கண்மணியே அடா
ஒப்பில்லா தவத்தினால் உதித்தசெங்கனியே-ஓ
உன்னைப்பிரிந்திருப்பேனோ தனியேமகனே
அடா தனியே சுதனே அடா (அ)
அப்பாமகனேயுன்னைப்பிரிந்து என்னுவிதரித்திடுமோ
ஐயனே யென்னுள்ளம் நையுமே-அப்பாவுன்னையும்

கோலமாங் கலியாணஞ்செய்து கண்ணாலே பார்க்கிலேயேயடா-கொற்றவாவயிற்பற்றுதே-மிகக்கற்றவர்-கொடும்பாவியான் பெற்றகடனைத்தீர்க்கிலேயோ · (அ)

சாலவுந்தவத்தால் வந்துதித்த கோலமாங்குமராசற்குணா-உன்னைப்பிரிந்து எப்படி உயிர்தரித்திருப்பேன்

மார்க்கண்டேயர் சொல்லுதல் தங்கமெட்டு.

நான் சிவபூசைசெய்து எமனை விலக்கிக்கொண்டுபோகும்வழி தேடிக்கொள்வேன் என்னம்மணி புலம்பியழுகாதே, அல்லும்பகலும்நான் அரனைப்பூசைசெய்து வல்வினைத் தீர்த்துக்கொள்வேன், என்னம்மணி புலம்பி அழுகாதே.

புலம்பல்-தரு-இ-ம்-வராளி-அடதாளம்

கண்ணிகள்.

கடையூர்தனிலேகாலனென்மேலே கடுகியேவாரானே
அவனைக்கண்டவுடனே கலங்குதே என்மனங்
காருங்கங்காதரனே

படையுடனேவாரான்-சடசடெனநேராய்-என்
சடலமெல்லாம் படபடென்ன
கடவுளேநானென்னசெய்வேன் (கடை)

இந்த எமன்வதையைத்தீர்க்க இதுசமயமையாயவன்
இரைந்துகொண்டென்றன் மீதினில்வாரா
னென்றுயர்தீரும் ஐயா

பூசை-தரு-திபதை-நீலாம்புரி-அடதாளம்.

காலன்வாராமலென்னைக் காப்பாற்றுவாயென்றே
கந்தமலரெடுத்துச் சூடுவேன் சுவாமி
மூலகரணமான முதலேகடையூரீசா
முல்லைமலரெடுத்துச் சூடுவேன் ௧

கன்றிவருங்காலனைக் காலாலுதைத்தேயென்னை
காப்பாயெனவேமலர் சூடுவேன் சுவாமி
என்றுபதினாறுக ஈவாய் கடையூர்வாழும்
ஈசாமலரெடுத்துச் சூடுவேன் ௨

பாலன்றனக்குமுடிவளைத்த பொருளேயுன்னை
பக்ஷமுடன்மலரால் சூடுவேன் சுவாமி
வேலன்றனையளித்த விமலாகடையூரீசா ,,
வெட்சிமலரெடுத்துச் சூடுவேன் ௩

பார்வதியைப்பாகத்தில் வைத்தப்பரனேயுன்னை
பாரிசாதமலரால் சூடுவேன் சுவாமி
சீர்கழுங்கடையூர் வாழும்முதலேயுன்னை
செண்பகமலரெடுத்துச் சூடுவேன் ௪

கமலாலயன்மால்போற்றுங் கருணைக்கடலேயுன்னை
கதம்பமலரெடுத்துச் சூடுவேன் சுவாமி
விமலாகடையூர்வாழும் வேதப்பொருளேயுன்னை
விதவிதமாய்மலரால் சூடுவேன் ௫

இ-ம்-பண்-சாதாரி.

தலையேநீவணங்காய் தலைமாலைதலைக்கணிந்துதலை
யாலேபலிதேருந் தலைவனைத்தலையேநீவணங்காய், கண்
காள் காண்மின்களோ கடனஞ்சுண்ட கண்டன்றன்
பெண்டோள்வீசி நின்றாடும்பிரான்றனைக் கண்காள்கா
ண்மின்களோ, செவிகாள் கேண்மின்களோ-சிவ-னெம்
மிறை செம்பவள-வெரிபோன்மேனிப்பிரான்றிறமெப்
போதும் செவிகாள்கேண்-மின்களோ, மூக்கேநீ முர
லாய்-முதுகாடுறைமுக்கணனை, வாக்கேநோக்கிய மங்
கைமணாளனை மூக்கேநீமுறலாய் வாயேவாழ்த்துகண்
டாய் மத-யானையுரிபோர்த்துப் பேய்வாழ் காட்டகத்
தாடும்பிரான்றன்னை வாயேவாழ்த்துகண்டாய், நெஞ்
சேநீநினையாய்-நீயுன்புன்சடை நின்மலனை, மஞ்சாடும
லைமங்கைமணாளனை நெஞ்சேநீநினையாய், கைகாள்கூப்
பித் தொழீர்காடி-மாமலர்தூவிடுநின்றி-பைவாய்ப்பர
ம்பரங்காரத்த பரமனை கைகாள்கூப்பித்தொழீர் ஆக்
கையாற்பயனென்-அரன்-கோயில்வலம்வந்து-பூக்கை
யாலட்டிப்போற்றி யென்னுவிதவாக்கையாற் பயனெ
ன், கால்களால் பயனென் கறைக்கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக் கோகரணஞ் சூழக்கால்களாற் பய
னென், உற்றாருளரோ உயிர்கொண்டுபோம்பொழு
து-குற்றாலத்துறை கூத்தனல்லாமனக் குற்றாருள
ரோ, இறுமாந்திருப்பன் கொலோ ஈசன்பலகணத்தெ
ண்ணப்பட்டு, சிறுமானேந்தி தன்சேவடிகீழ்ச்சென்ற
ங்கிறுமாந் திருப்பன்கொலோ தேடிக்கண்டுக்கொண்

டேன் திருமாலொடு நான்முகனும்தேடித்தேடொணு த்தேவனையென்னுள்ளே தேடிக்கண்டுகொண்டேன்.

மார்க்கண்டேயர் எமனுக்குச்சொல்-தரு.

இ-ம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரென்றுநினைத்தாயடா எமா-யெங்க
ளமுர்தகண்டீசரான ஆண்டவரருகிருக்க ஆரெ

அநுபல்லவி.

காரணங்கடந்தபரி பூரணமதாய்நிறைந்த
ஆரணமந்தப்பொருளைச் சாறுமடியார்களிடம்
கோரரூபமாகவந்து சீறும்புலிபோல்நின்று
வீரியமாய்வார்த்தைசொன்ன சூரியன்மகனேபோடா

சரணங்கள்.

அண்டபுவனங்களெல்லாம் கண்டிடும்பேர்களொடுங்க, வண்டனைப்போல் வார்த்தைபேசி சந்தாநீ வந்தாய்உன்னை, கண்டஞ்சுவனோபோடாநீ தண்டுமுண்டுமாய்ப்பேசாதே, பண்டுமுப்புரமெரித்தாற் தொண்டனென்றறியாமலே.

சாமிசொல்-விருத்தம்

பாலனேபயப்படாதே பகர்ந்தநல்வயதீரெட்டும்
ஞாலத்தோரறியத்தந்தோம் நாளென்றும்பதினாறுக
காலனுக்கஞ்சவேண்டாங் காருத்தனயன்கொண்டாட
சீலமாங்கைலேதந்தோம் திருப்பதம்பூசிப்பாயே.

முற்றிற்று.

சிவமயம்.

சிவநாமாவளிகள்.

சிவசிவகஜமுக கணநாதா
சிவகுணவந்தித குணநீதா. க

அம்பலத்தரசே யருமருந்தே
ஆனந்தத்தேனே யருள்விருந்தே. உ

பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெல்லாம்புகழ் கண்ணியனே. ௩

சிவ சிவ சிவ சிவ சின்மயதேஜா
சிவசுந்திர குஞ்சித நடராஜா. ச

அரகரசிவசிவ மாதேவா
அருளமுதந்தர வாவா. ரு

சங்கரசிவசிவ மாதேவா
எங்களையாட்கொள வா வா வா. சு

நடராஜனெல்லார்க்கு நல்லவனே
நல்லவெலாஞ்செய வல்லவனே. எ

நடராஜமாணிக்க மொன்றதுவே
நண்ணுதலாணிப்பொன் மன்றதுவே. அ

நடராஜவள்ளலை நாடுதலே
நந்தொழிலாம்வினை யாடுதலே. ௯
அரிபிரமாதியர் தேடியநாதா
அரகரசிவசிவ ஆடியபாதா. ௧௦
அருட்பொதுநடமிடு தாண்டவனே
அருட்பெருஞ்சோதி யென்னாண்டவனே. ௧௧
நாதாந்தநாட்டுக்கு நாயகரே
நடராஜரேசபா நாயகரே. ௧௨
சிவகாமிவள்ளிக்கு மாப்பிள்ளையே
திருவாலனனவன் சீர்ப்பிள்ளையே. ௧௩
நடராஜர்தன்னட நன்னடமே
நடம்புரிகின்றது மென்னிடமே. ௧௪

வேறு.

போகஞ் சுகபோகஞ் சிவபோக மதுநித்தியம்
ஏகஞ் சிவமேகஞ் சிவமேக மிதுசத்தியம். ௧௫

வேறு.

அஞ்ச லஞ்சலென்றுவந்தெ னெஞ்சமர்ந்த குழகனே வஞ்சநஞ்ச முண்டகண்ட மன்றுள்நின்ற வழகனே, தொண்டர்கண்டு கண்டுமொண்டி கொண்டுணுண்டவின்பனே, அண்டரண்ட முண்டவிண்டு தொண்டு மண்டு மன்பனே. ௧௭

வேறு.

ஞானசபாபதியே மறைநாடுசதாகதியே
தீனதயாநிதியே பரதேவியுமாபதியே. ௧௮

நாதபரம்பரனே பரநாதசிதம்பரனே
நாததிகம்பரனே தசநாதசுந்தரனே. கசு
ஞானநடத்தவனே பரஞானியிடத்தவனே
ஞானவரத்தவனே சிவஞானபுரத்தவனே. உ0

வேறு.

சிற்சபையும்பொற்சபையும் சொந்தமெனதாச்சு
தேவர்களுமூவர்களும் பேசுவதென்பேச்சு
இச்சமயவாழ்விலெனக் கென்னையினியேச்சு
என்பிறப்புத்துன்பமெலா மின்றோடேபோச்சு.
துரியமலைமேலுளதோர் சோதிவளநாடு
தோன்றுமதிலையர்நடஞ் செய்யுமணிவீடு
தெரியுமதுகண்டவர்கள் காணிலுயிரோடி
செத்தார்களெழுவரென்றுகைத்தாளம்போடு.()

வேறு.

அம்பலவாணர்த மடியவரே
அருளரசாள்பணி முடியவரே. உக
அருட்பெருஞ்சோதியைக் கண்டேனே
ஆனந்தத்தெள்ளமு துண்டேனே. உஉ
இருட்பெருமாயையை விண்டேனே
எல்லாஞ்செய்சித்தியைக் கொண்டேனே. உரு
தயாபதிமதம் தபோபிரசாதம்
சபாநிதிபோதம் சதோதயவேதம். உசு
சிதம்பரப்பாட்டே திருப்பாட்டு
சீவர்ஏள்பாட்டெல்லாம் தெருப்பாட்டு. உஎ

அம்பலப்பாட்டே யருட்பாட்டு
அல்லாதபாட்டெல்லா மருட்பாட்டு.

மலைதருமகளேமடமயிலே திருமுகவமுதே விளங்குயிலே, அம்பரவிம்ப சிதம்பரநாதா அஞ்சிதரஞ்சிதகுஞ்சிதபாதா, அந்தணவங்கண வம்பரபோகா அம்பலநம்பரவம்பிகைபாகா, கனகசிதம்பர கங்கரபுரஹர அனகபரம்பர சங்கர ஹர ஹர.

துதி.

கல்லார்க்குங்கற்றவர்க்குங் களிப்பருளுங்களிப்பே
காணார்க்குங்கண்டவர்க்குங் கண்ணளிக்குங்கண்ணே
வல்லார்க்கும்மாட்டார்க்கும் வரமளிக்கும்வரமே
மதியார்க்குமதிப்பவர்க்கு மதிகொடுக்குமதியே
நல்லார்க்கும்பொல்லார்க்கும் நடுவினின்றநடுவே
நரர்களுக்குஞ்சுரர்களுக்கு நலங்கொடுக்குநலமே
எல்லார்க்கும்பொதுவில்நட மிடுகின்றசிவமே
என்னரசேயான்புகலு மிசையுமணிந்தருளே. ௩௩
மருந்தறியேன்மணியறியேன் மந்திரமொன்றறியேன்
மதியறியேன்விதியறியேன் வாழ்க்கைநிலையறியேன்
திருந்தறியேன்றிருவருளின் செயலறியேனறந்தான்
செய்தறியேன்மனமடங்குந் திறத்தினிலோறிடத்தே
இருந்தறியேனறிந்தோரை யேத்திடவுமறியேன்
எந்தைபிரான்மணிமன்ற மெய்தவறிகவனோ
இருந்ததிசைசொலவறியே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே

பொருத்தம்.

எனக்குமுனக்குமிசைந்த பொருத்தமென்னபொருத்
இந்தபொருத்தமுலகிற்பிறருக் கெய்தும்பொருத்தம்
வள்ளாலுனைப்பாடபாட வாய்மணக்குதே
வஞ்சனைகளெனைவிட்டோடித் தலைவணங்குதே
எள்ளானதுனதுபுகழைக்கேட்க செவிநயக்குதே
எந்தாய்தயவையெண்ணுந்தோறு முளம்வியக்குதே
அரசேயுன்னையணையவெனக்கு ளாசைபொங்குதே
அணைப்போமென்னுமுண்மையா லென்னுவிதங்குதே
விரைசேர்பாதம்பிடிக்கவென்கை விரைந்துநீடுதே
மேவிப்பிடித்துக்கொள்ளுந்தோறு முவகையாளுதே
அப்பர்நின்னையறியங்கு மணைப்பாரில்லையே
அந்தோநின்னையன்றியெங்கு மருள்வாரில்லையே
எப்பாலவர்க்குநின்னையன்றி யிறைமையில்லையே
எனக்குநின்மேலன்றியுலகி லிச்சையில்லையே

வேறு.

மனமெனுமோர்பேய்க்குரங்கு மடப்பயலேநீதான்
மற்றவர்போலெனைநினைத்து மருட்டாதேகண்டாய்
இனமுறவென்சொல்வழி யேற்றிலையானுலோ
தினையளவுன்னதிகாரஞ் செல்லவொட்டேனுலகஞ்
சிரிக்கவுனையடக்கிடுவேன் றிருவருளாற்கணத்தே
நனைவிலெலனையறியாயோ யாரெனவிளங்கிருந்ததால்
ஞானசபைத்தலைவனுக்கு நல்லபிள்ளைநானே

மாயையெனும்படுதிருட்டுச் சிறுக்கியிதுகேளுன்
மாயையெலாஞ்சுமைசுமையாய் வரிந்துகட்டிகொண்டு
சாயையென்னும்பெண்ணினத்தார் தலைமேலுமுனது
தலைமேலுஞ்சுமந்துகொண்டோர் சந்துவழிபார்த்தே
பேயெனக்காட்டையோடி பிழைத்திடுநீயலையேற்
பேசுமுனைமாய்த்திடுவேன் பின்னுமுன்னும்பாரேன்
ஆயெனையறியாயோ வெல்லாஞ்செய்வல்லார்
அருளமுதுகண்டலைமே லமர்ந்தபிள்ளைநானே

ஆதிநீதிவேதனே ஆடல்நீடுபாதனே
வாதிஞானபோதனே வாழ்கவாழ்கநாதனே.

உ

சண்முகன் றுணை.

திருத்தணிகை மலைக்கண்ணி.

இ-ம்-இந்துஸ்தானி-காபி.

பல்லவி.

தணிகைவாழ்ஷண்முகவேலா-உனைச்
சார்ந்தவர்க்கருள்புரி சங்கரன் பாலா

குழந்தைவேலாயுதநாதா எங்கள்
குமரனெனத்துதிப் பார்க்கருள்நீதா தணிகை
அருவினை தீர்க்கின்ற வையா உன்றன்
அடியிணையன்பருக் கருள்புரிதுய்யா தணிகை

அருட்சத்திவேல்கொண்டவீரா சூரென்
அவுணனைக்கொன்றவன் மீதேறுந்தீரா தணிகை
கந்தரகிரியமரெந்தா-நீயே
கருணைசெய்வாயென்ற பேர்க்கருள்தந்தாய் தணிகை
கோபமிலாக்குணசீலா-நல்ல
குறத்திக்கானமறை யாமணக்கோலா தணிகை
தாங்கும்புவியின்மெய்யாளர்-அன்பாய்
தாத்தையெனமயின்மேல் தாண்டுந்தயாளா தணிகை
ஆறுமுகங்கொண்ட அப்பா-எனை
ஆட்கொண்டுநின்னடிக்கன்பாய் நீவைப்பாய் தணிகை
ஈராறுதோள்கொண்ட ஈசா-எங்கள்
ஈசனுக்குபதேசம் ஈய்ந்திட்டநேசா தணிகை
வேலாயுதம்படைத்த கையா-என்றன்
மேஷடமொழித்தினி கருணைசெய் ஐயா தணிகை
இடும்பனுக்கருள்செய்த வீசா-நின்ற
இணையடிக்கன்பில்லாவெனக்கருள் பேசாய் தணிகை
தீராவினை தனை தீர்ப்பாய் நீயேயன்
சிறுவினை நீக்கியே சீரொடுகாப்பாய் தணிகை

வேறு.

சங்கரன்பாலனை சண்முகவேலனை
நங்குலதெய்வத்தை நாம்தொழுதுய்வமே
கந்தனை எந்தையைசிந்தனைசெய்பவர்
தந்துயர்நீங்கியே சாருவரின்னமே.

முருகனைமாயவன் மருமகனைநினைப்பவர்
திருவினையெய்தியே சேவடிக்கீழ்ச்செல்வா
பழனியில்வாழ் எங்கள் பார்வதிபாலன்றன்
கழலிணைதொழுபவர் கன்மங்கள்பாருமே
பிரமனைவினவிய பிரணவத்தின்பொருள்
அறன்றனக்குபதேசம் அருளியநாதனே.

வேறு.

தணிகையில்வாழ் சரவணபவனே
அருள்தாராய் கிருபைபாராய்
அன்பர்கள்துதிக்கும் இன்பனேயென்னுடை
துன்பத்தைநீக்கியே இன்பத்தையீந்திட
பொன்மயிலேறியே அன்புடன்நீவருவாயே.
கந்தாவுந்தன்கருணை தந்தெனைகாப்பாய்-வினை தீர்ப்பா
வள்ளிதெய்வயானை மாதுடன்கூடியே
புள்ளிமயிலேறி வள்ளலேவந்தென
துள்ளத்தின்மேவிய கள்ளத்தைநீக்கிடுவாயே.
கண்ணே எந்தன்கவலையாவுங்களைவாய் அருள்புரிவாய்
அண்ணலேவந்தென் துன்னிறைபாசத்தை
நுண்ணிதில்போக்கியே வண்ணமலர்ப்பதம்
கண்மணியேயிப்போ திண்ணமாய்தந்திடுவாயே.

வேறு.

வாழிநீவாழிவேல் வாழிவள்ளி
வாழிதெய்வானைநின் மலர்ப்பதம்வாழி.